**பண்டாரகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பண்டாரகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய தபால் முத்திரைக் கட்டண செலவினம் ரூபா 162,255 ஆக இருந்த போதிலும், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 123,880 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டண செலவினம் ரூபா 38,375 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஏணியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 14,500 தொகை மீண்டெழும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ஊழியர் கடன் மீதி ரூபா 9,397 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய மின் உபகரணங்களின் களஞ்சிய மீதி ரூபா 190,421 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக களஞ்சிய மீதி ரூபா 190,421 தொகை குறைவாகவும் செலவினங்கள் ரூபா 190,421 தொகை அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் செலவினக் கடன் கொடுத்தோர் ரூபா 12,270 வீதம் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய நிர்மாணச் செலவினம் மற்றும் வேலைக் கடன் கொடுத்தோர் பெறுமதி ரூபா 730,238 வீதம் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்குரிய வேலைக் கடன்பட்டோர் மற்றும் வேலை நிதியுதவி ரூபா 716,747 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 153,018 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 1,684,422 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் நடப்பாண்டின் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் சிட்டையிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 23,060,423 தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,105,953 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெறவேண்டிய கணக்குகள்**

(i) பல வருட காலமாகக் கொண்டு வரப்படுகின்ற மின்சாரத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 645,435 மீதி மற்றும் சபையின் வைப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 10,470 தொகையான மதிப்பிழந்த காசோலை மீதி என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பல வருட காலமாக பெறுமதி சேர் வரிக் கணக்கில் பேணப்பட்ட ரூபா 329,555 தொகையான பெறவேண்டிய மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, முற்பணப் பதிவேடு மற்றும் உரிய பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 223,837,291 கூட்டுத்தொகையான 11 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த / ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | | |
| (i) 134(1) ஆம் பிரிவு | - | உள்ளுராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக பிரதேச சபையினால் |

| | | | |
|---|---|---|---|
| | | | வெளியிடப்பட்ட பிரதேசங்களில் உள்ளடங்கியுள்ள அசைவுறாத ஆதனங்கள் தொடர்பாக வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 160 ஆம் பிரிவு | - | நிலுவை ஆதனவரியை அறவிடும் இறுதி நடவடிக்கையாக சொத்துக்களைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி 218 | - | சபைக்குச் சொந்தமான காணி, கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவை பரீட்சிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 4,144,661 | எந்தவொரு பணிக்காகவும் வழங்கப்பட்ட முற்பணம் உரிய பணி நிறைவுற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571(1)(2) | - | ஒவ்வொரு அரையாண்டு இறுதியின் போதும், காலாவதியான சகல வைப்புக்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரித்து காலாவதியான வைப்புக்கள் அரச வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 31,698 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த 12 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) நிதிப்பிரமாணம் 1647(ஆ) | - | சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வாகனங்கள் மற்றும் அவற்றின் உதிரிப்பாகங்கள் தொடர்பாக முழுமையாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | ஆதன வரிக்கு உட்படுகின்ற, ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2016 நவம்பர் 09 ஆந் திகதிய LGO/13/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | சபைக்குச் சொந்தமான கடைகளில் உப வாடகையாளராக இருக்கின்றவர்களை இனங்கண்டு உபவாடகையாளர்களை வாடகையாளராக நியமித்து சட்டரீதியான வாடகை உரித்தைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபையின் வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு வருடாந்தம் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 15,639,590 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 8,823,523 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

இலங்கை வங்கி (பண்டாரகம) 0-004720 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் ரூபா 2,875 தொகையான மீதி பல வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,314,000 | 7,370,955 | 8,152,177 | 1,119,653 | 6,337,400 | 7,409,669 | 8,428,578 | 1,980,876 |
| வாடகை | 1,422,000 | 1,528,500 | 1,527,490 | 118,285 | 1,578,200 | 1,009,800 | 1,134,815 | 117,275 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 296,000 | 337,650 | 337,650 | - | 157,500 | 264,450 | 264,450 | - |
| ஏனைய வருமானம் | 21,662,000 | 6,987,252 | 75,328,820 | 58,632,272 | 74,826,500 | 1,684,422 | 54,846,207 | 66,337,923 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 68,436,074 ஆக இருந்ததுடன் ஆண்டில் சிட்டையிடப்பட்ட தொகை ரூபா 16,224,357 ஆகும். ஆண்டின் போது பெறுவனவுகள் ரூபா 85,346,137 மற்றும் முத்திரைக் கட்டணமும் நீதிமன்றத் தண்டப் பணத்திற்காகவும் மேற்கொள்ளப்பட்ட சீராக்கல்களின் தேறிய பெறுமதியின் வரவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 60,635,918 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த நிலுவை ரூபா 59,950,210 ஆகும்.

### 2.2.3 வீதவரியும் வரியும்

#### (அ) ஆதனவரி

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை மீதி ரூபா 1,980,876 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 1,472,105 தொகை அதாவது 74 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்காக ஆதனவரி சிட்டையிடல் ரூபா 3,639,102 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 2,948,220 தொகை அதாவது 81 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் சிட்டையிடல் ரூபா 690,882 தொகை மற்றும் முன்னைய ஆண்டுகளின் நிலுவையில் ரூபா 508,770 தொகை அறவிட வேண்டியதாகக் காணப்பட்டதுடன் ஒட்டுமொத்த ஆதனவரி நிலுவை ரூபா 1,119,652 ஆகும்.

(iv) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி வருமானத்திற்காக காலப்பகுப்பாய்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) வியாபார வரியும் கைத்தொழில் வரியும்

2016 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரிகளை அறவிடுவதற்காக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் 18 வியாபாரங்களிலிருந்து ரூபா 104,400 தொகையும், 18 கைத்தொழில்களிலிருந்து ரூபா 18,000 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 122,400 நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3.4 ஏனைய வருமானம்**

**(அ) அறிவித்தல் பதாதை வருமானம்**

மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக 30 நிரந்தர அறிவித்தல் பதாதைகளுக்காக ரூபா 430,400 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**(ஆ) வாராந்த சந்தை வருமானம்**

(i) 2017 சனவரி மாதம் வரை வாராந்த சந்தை மாதாந்தம் ரூபா 3,000 வாடகை அறவிடும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 125 வியாபாரிகளிடமிருந்து ரூபா 737,270 தொகையான நிலுவை வாடகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் காணப்பட்டது. அந்த நிலுவைத் தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் வாராந்த சந்தை வாடகையாளரின் வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு நாளாந்தம் சந்தை வருமானம் சேகரிக்கும் போது 2017 சனவரி மாதத்தின் போது 03 நாட்களும், பெப்ரவரி மாதத்தில் 03 நாட்களும், மார்ச் மாதத்தின் போது ஒரு நாளும், ஏப்ரல் மாதத்தின் போது 05 நாட்களும், மே மாதத்தின் போது 04 நாட்களும் மற்றும் யூன் மாதத்தின் போது 02 நாட்களும் சந்தை நடைபெறாமையின் அடிப்படையில் வருமானம் சேகரிக்கப்படாதிருந்ததுடன் சந்தை நடாத்தப்படாமைக்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

**(அ) நீதிமன்றத் தண்டப் பணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினர்களிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 7,429,557 ஆகும்.

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

(i) மீளாய்வாண்டிற்குரியதாகக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 51,202,717 ஆகும்.

(ii) மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டண சிட்டையிடலாக 2015 ஆம் ஆண்டிற்காக ஹெரண மற்றும் களுத்துறை காணிப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,302,830 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்திற்காக பட்டோலை தயாரித்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய சிட்டையிடல்களும் சரியாக இருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதி

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உபவிதியொன்று விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஒரு விடயத்திற்காக மாத்திரம் உப விதி விதிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

சபையினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 34 வேலைகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 22 வேலைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

#### (இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

சபையினால் கழிவுப்பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக வலை கதவுகளுடன் கூட்டுப்பசளைத் தளமொன்று பேணப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 7,325,723 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக உப விதியொன்று விதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கழிவுகள் போடப்படுகின்றஇடத்திற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) கழிவுப்பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காகச் செலவாகின்ற கிரயங்களை மேவுகை செய்வதற்காக கழிவுப்பொருள் வரி விதிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

### (அ) நலன்புரி சேவைகளை வழங்குதல்

(i) விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த நபர்களின் கோரிக்கையின் பேரில் செயலாளர் அல்லது பணிப்பொறுப்பு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய நலன்புரி உபகரணங்கள் விநியோகிகப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட குறைவாக கையளிக்கப்படும் 14 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் நட்டத்தை அறவிடும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படவில்லை. அவ்வாறு பெறப்பட்ட உபகரணங்கள் குறைவாக கையளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் போது அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உடற்பயிற்சி நிலையத்தின் கட்டிடத்தில் உடற் பயிற்சி உபகரணங்கள் உடைந்த நிலையில் காணப்பட்ட போதும் அதனை நவீனமயப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வீதி பழுதுகளைத் திருத்துதல்

பழுதடைந்த வீதிகளின் திட்டத்தின் பிரகாரம் பழுதடைந்த 139 கொங்கிறீட் வீதிகளும், கொங்கிறீட் சிறுகற்கள் பதித்த 05 வீதிகளும், 06 காபட் வீதிகளும் திருத்தியடைக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், அதில் 73 கொங்கிறீட் வீதிகளுக்கு மாத்திரமே திருத்தியமைக்கப்பட்டிருந்தது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

(அ) உள்ளபடியான 198 பதவியணியினருக்கு மேலதிகமாக 09 அமைய ஊழியர்களும் மீளாய்வாண்டின் பதவியணியினரில் உள்ளடங்கியிருந்தனர்.

(ஆ) வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவியின் கடமைகளை மேவுகை செய்தல் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தரால் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத அரச நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 இன் மூலம் நிரந்தரமாக்கப்பட்ட 18 ஊழியர்கள் உள்ளபடியான பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) 02 முகாமைத்துவ உதவியாளர் பதவியில் மிகை காணப்பட்டது.

(உ) சபையின் பதவியணியினர் தகவல்களின் பிரகாரம் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 66 வெளிக்கள தொழிலாளர்களில் 33 பேருக்கு உரிய கடமைகளுக்குப் புறம்பான கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டதுடன் 32 சுகாதாரத் தொழிலாளர்களில் 14 பேர்கள் உரிய பணியில் ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை

(அ) சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட காணி, கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காணி,

கட்டிடங்களின் பெறுமதியாக ரூபா 97,089,333 காண்பிக்கப்பட்டிருந்தது. அப்பெறுமதி 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட கட்டிட நிறுவனங்களின் பெறுமதி மற்றும் ஒரு காணிக்குரிய பெறுமதி மாத்திரமாக இருந்தது.

(ஆ) காணி ஏலவிற்பனையின் மூலம் பொது வசதிகளுக்காக சபைக்குக் கிடைத்த சகல காணிகள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் பேணப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு எதுவும் நாளதுவரையாப் பேணப்படாதிருந்தமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களுடன் வழங்கப்பட்டுள்ள பட்டோலைகளின் சரியான தன்மையைப் பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஈ) சபைக்குரிய வீதிகளை சரியாக இனங்காண்பதற்கும், வர்த்தகமானியில் பிரசுரிப்பதற்கு அல்லது பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு அல்லது காணப்படுகின்ற பதிவேடுகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

இயந்திரத்தின் மூலம் கருங்கல் உடைப்பதற்காக ரூபா 2,472,740 செலவில் 2008 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கருங்கல் உடைக்கும் இயந்திரம் 2009 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.4.3 இருப்புக் கட்டுப்பாடு**

---

**மின் பொருட்கள் இருப்பு விநியோகித்தலும் கையேற்றலும்**

---

(அ) 2017 ஒக்தோபர் மாதம் வரை பிரதான களஞ்சியத்தில் 23 வோல்ட் பிரதீப்த மின் குமிழ்கள் 720 விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதிகரித்து அலுவலகத்தின் இருப்பு புத்தகத்தில் பெறுவனவாக 384 மின்குமிழ்களே பதியப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 336 மின்குமிழ்களின் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) தல்பிட்டி பத்த உப அலுவலகத்திற்கு பிரதான அலுவலகத்தால் 02 சந்தர்ப்பங்களின் போது 200 மின்குமிழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் தல்பிட்டி பத்த உப அலுவலகத்தில் கிடைப்பனவாக இருப்புப் புத்தகத்தில் 100 மின்குமிழ்கள் மாத்திரமே பதியப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 51,000 பெறுமதியான 23 வோல்ட் இன் 100 பிரதீப்த மின்குமிழ்களில் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

**3.5 பெறுகைகள்**

---

**(அ) வழங்கலும் சேவைகளும்**

---

(i) 2017 ஆம் ஆண்டில் வழங்குனர்களைப் பதிவு செய்வதற்காக கூறுவிலைகள் கோரல் 2016 ஒக்தோபர் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டின் வழங்குனர்கள் கணிசமான கால தாமதத்தின் பின்னர் 2017 யூன் மாதத்தின் போதே தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஆண்டின் ஆரம்பத்தின் போது ஆண்டிற்கான வழங்குனர்கள் பதிவு செய்யப்படாமையின் காரணமாக வழங்குனர்களைப் பதிவு செய்யும் செயற்பாடுகள் ஆக்கபூர்வமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 23 வோல்ட் பிரதீப்த மின்குமிழ் கொள்வனவு செய்யும் போது 2017 ஆம் ஆண்டில் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனர் தெரிவு செய்யப்படாமல்

அதிக கூறுவிலை சமர்ப்பித்த வழங்குனர் தெரிவு செய்யப்பட்டமையால் சபைக்கு ரூபா 206,155 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(iii) வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும் போது பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமிருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**(ஆ) ஒப்பந்த நிர்வாகம்**

அறுக்கொட தெற்கு சனாதிபதி மாவத்தையில் மூன்றாவது ஒழுங்கைக்கு கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 925,047 தொகையான செலவினமொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அந்த வீதியின் அனேக இடங்களில் கற்கள் வெளிப்பட்டு பரவியிருந்ததுடன் அந்த வீதி உரிய நியமத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 6.4 சதவீதம் முதல் 241 சதவீதம் வரையும், செலவினங்களில் 6.9 சதவீதம் முதல் 205 சதவீதம் வரையிலான வீச்சிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்குகளில் கைவிடப்பட்டமை மற்றும் குறைத்தும் அதிகரித்தும் பதியப்பட்டமை |
| | (ii) பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) சொத்துக்கள்/ஆதனங்கள் | (i) பதிவேடுகளுக்குக் கொண்டு வராமை |
| | (ii) பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) வருமான நிர்வாகம் | நிலுவை வரி அறவிடல் போதியளவான பிரகாரம் இடம்பெறாமை |
| (ஈ) பதவியணியினர் முகாமைத்துவம் | (i) பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளப்படாமை |
| | (ii) வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |
| (உ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| | (ii) வருமான மதிப்பீடு சரியானதாக இடம்பெறாமை |